# செந்தணல்

ஜீன் 1984

3.
குரல்

ஈழப்பெண்கள் விடுதலைமுன்னணி

அடுப்போடு வாழ்ந்த நெருப்புகள் - நாங்கள்
எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏய்...காட்டுமிராண்டியே...
# கல்லறை கட்ட வருகிறோம்

என் துணைவன் என் மக்கள் நய்யப்புடைக்கப்பட்டு
நடு வீதியில் எரிக்கப்பட்டார்கள்
என் மகள் உன் சதை வதைக்கு கோரப்பலியானாள்
என் தேச வனப்புகள்
சூறையாடிக் கொளுத்தப்பட்டன.



ஏய்! காட்டுமிராண்டியே!
உன் கொலை வெறிக்கு,
உன் கோரப்பலிக்கு!
உன் சதைப் பசிக்கு
உன் காடைத்தனத்துக்கு
கல்லறை கட்டவருகிறோம்!
சொத்தடிமை
பூட்டிய
வீட்டடிமை விலங்கை
உடைத்தெறிந்தோம்
ஆதிக்கமலைகளைத்
தகர்த்தெறியப்
புறப்பட்டுவிட்டோம்
இணைந்தோம்
மக்கள் விடுதலைப் படையில்
இனி,
அகப்பை தான், என்பதை மாற்றி
ஆயுதத்தை ஏந்துவோம்
தேசப்பகைவர்களை
எரித்துத் தள்ளுவோம்;
வீட்டடிமை ஒழிய வேண்டின்
சம உடமை உதிக்க வேண்டும்;
சம உடமை உதிக்க வேண்டின்
நாட்டடிமை ஒழிய வேண்டும்;
யாசித்துப் பெறுவதல்ல
விடுதலை -நாம்
போரிட்டுப் பெறுவதே
விடுதலை
எனவே
போரிடுவோம்...போரிடுவோம்...!
இனி,
உடைத்தெறிய வேண்டிய அனைத்தையும்
உடைத்தெறிவோம்
அறுத்தெறிய வேண்டிய அனைத்தையும்
அறுத்தெறிவோம்
மீட்டெடுப்போம். எம்
பாசபூமியை - அங்கே
சம உடமைச் சூரியனை
உதிக்கச்செய்வோம்!

—தோழர் செந்தூரா

# எமது எண்ணங்கள்

எண்ணற்ற மக்களும், விடுதலைப் போராளிகளும் ஈழப்போராட்டக்களில் எதிரிப்படைகளால் கோரத்தனமாய் கொலையுண்டனர்.

ஈழத்தின் மகோன்னதமான சிவந்த விடியலுக்காய் தமது இன்னுயிர்களை ஈய்ந்த செம்மலர்களுக்கு காணிக்கையாகக் கூடியது ஈழதாயகத்தின் நிரந்தரமானதும், பிரகாசமானதுமான விடுதலை மட்டுமே.

எமது பிரகாசமான விடுதலைக்காக ஈழ தேசமக்கள் உறுதியுடனும், பிடிவாதமாகவும் போராடுவதன் அவசியத்தை சிறீலங்காவின் ஆயுதமேந்திய ஆக்கிரமிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

ஈழவிடுதலைப் போராட்டம் என்பது ஆயுதம்தரித்த மக்கள் யுத்தமாகவே இருந்திட முடியும். ஈழத்தின் மீது பகைவர்களால் நடத்தப்படும் எதிர்ப் புரட்சிகரமான வன்முறை வெறியாட்டத்தை நாமும் ஆயுதமேந்திய புரட்சிகர வன்முறை மூலமே நிறுத்திட முடியும்.

இத்தகைய புரட்சிகர யுத்தம் ஈழத்தின் பரந்துபட்ட மக்களின் வலிமை மீது சார்ந்து நிற்கவேண்டும். ஆயுதங்களை மட்டும் வைத்துப்புரட்சியின் வெற்றி, தோல்வியைக் கணிப்பிடாது மக்கள் சக்தியின் படைப்பாற்றலைக் கொண்டே விடுதலைப் புரட்சியின் வெற்றியீட்டலை உறுதிப்படுத்த முடியும்.

எனவே பரந்துபட்ட வெகு மக்களை அமைப்பு ரீதியாக அணி திரட்டிட, அவர்களிடம் பிரச்சாரவேலைகளையும், மக்கள் யுத்தத்திற்கான பங்காளிகளாய் மாறிட தூண்டிடும் வேலையையும் தீவிரமாக்கிட வேண்டும்.

இத்தகைய தெளிவின் அடிப்படையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) பெண்களுக்கான வெகுஜன ஸ்தாபனமான ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி (EWLF) ஈழ மக்களில் பெரும் பங்கினராய் உள்ள ஈழப்பெண்களை ஒன்றிணைத்து மக்கள் யுத்தப்பாதையில் அணி திரட்டி வருகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெகுஜன ஸ்தாபனங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி விளங்கி வருகிறது.

ஈழத்தின் இதுவரைகால வரலாற்றில் பெண்களுக்கான பத்திரிகையொன்றை வெளியிட்டவர்கள் என்னும் உரிமை எமக்குண்டு. செந்தணல் ஈழப் போராட்ட அரங்கை நோக்கியும் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டத்திற்காகவும் ஈழப்பெண்களைத் தட்டியெழுப்புவதில் சிறியபங்கு ஆற்றியுள்ளது.

எமக்கு வரும் விமர்சனக கடிதங்கள் செந்தணல் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப்பெண்கள் விடுதலைமுன்னணியில் இணைந்து கொள்வதற்கும், ஈழத்தின் புரட்சிகர யுத்தத்தில் பங்கு கொள்ளவும் செந்தணல் சேவை புரிந்த நாக தோழர்கள் பலர் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

ஆனாலும் சிலர் செந்தணல் பெண்களின் ஆக்கங்களையும், பெண் விடுதலையைப் பற்றிய கருத்துக்களையும் மட்டுமே தாங்கி வரவேண்டும் என எமக்குத் தெரியப்படுத்துகின்றனர்.

இக்கருத்தானது பெண்விடுதலைப்போராட்டம் பற்றியும், அதற்கும் சமூக விடுதலைப் புரட்சிக்கும் உள்ள பிரிக்க முடியாத இறுக்கமான தொடர்பையும் அறிந்து கொள்ளாத தெளிவின்மையின் பிரதிபலிப்பாகும்.

**பெண் விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரான வெறுப்பின் அடிப்படையிலான ஒன்றல்ல.**

என்று புராதன பொதுவுடமைச் சமூகம் தகர்ந்து சொத்துடமைச் சமூக அமைப்பு தோற்றமெடுத்ததோ அன்றுதான் பெண் அடிமையானாள்; வீட்டு அடிமையாக மாற்றப்பட்டாள். எனவே நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போலவே ''பெண் அடிமைத்தனத்தின் ஆதிமூலம் தனியுடமைச் சமூக அமைப்பாகும்.''

எனவேதான் தனியுடமைச் சமூக அமைப்புக்கெதிரான பாட்டாளிவர்க்கப் போராட்டத்துடன் பெண்கள் விடுதலைப் போராட்டம் இணைந்து கொள்ளவில்லையானால் பெண்கள் விடுதலை சாத்தியமாகாது.

பெண்கள் விடுதலைக்குப் பெண்களே முன்னின்று போராட வேண்டும் என்பதால் பெண்கள் தமக்கான அமைப்பில் அணிதிரளும் போதும் புரட்சிகரத் தலைமையின் வழிகாட்டுதல் இன்றி அவர்களால் சரியான திசைவழியைத் தெரிந்தெடுத்திட முடியாது.

சுரண்டப்படும் வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களில் சுரண்டும் வர்க்கங்களிலிருந்து வருபவர்கள் பங்கு கொள்ளக்கூடாது என்ற வாதம் எவ்வாறு முட்டாள்தனமானதோ அதேபோன்று பெண் விடுதலைப் போராட்டத்தில் தமது சிந்தனைகளைப் புரட்சிகரமாக்கிக்கொண்ட ஆண்களும் பங்குகொள்வதை மறுப்பதும் படுமுட்டாள்தனமானதாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காகப் போராட முன்வரும் சுரண்டும் வர்க்கங்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்க சிந்தனையுடையவர்களைப் பாட்டாளி வர்க்கம் வரவேற்கிறது. அதேபோலவே ஆண் அதிகாரத்தை எதிர்த்துப் பெண் விடுதலையின் அவசியத்தை உணர்ந்த ஆண்களும் பெண்விடுதலை இலட்சியத்திற்கு எதிரிகள் அல்ல என்பதைத்தெளிவாக உணர்ந்து கொள்வோம்.

பெண் விடுதலைப் போராட்டம் சமூக விடுதலைப் போராட்டத்துடன் பிரிக்கப்பட முடியாதது என்பதால் சமூக விடுதலைக்கான புரட்சிகரக் கருத்துக்களையும் செந்தணல் தாங்கிவரத்தே தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப்பெண்களைப் பொறுத்தவரை தேசிய விடுதலைப் போரிலும் பங்கு கொள்ள வேண்டிய நிலை இருப்பதால் தேசியப் புரட்சியின் திசைவழியைக் காட்டிடும் ஆக்கங்களையும் செந்தணல் சுமந்து வரும் என்பதையும் தெரிவிக்கிறோம்.

இன்று ஈழத்தில் நிலவும் சமூகஅமைப்பின் போலிக்கலாச்சாரமும், இற்றுப் போகும் மலட்டுத்தன மரபுகளும் போராடக் கிளர்ந்தெழும் ஈழப் பெண்களைத் தடுத்து நிறுத்துகின்றன.

பெற்றோரின் தடை, சகோதரனின் தடை, துணைவனின் தடை இத்தனையையும் மீறி ஒரு பெண் போராடப் புறப்படும்போது சாக்கடைக் கருத்துகளால் சாடும் சொத்துரிமைச் சமூக அமைப்பு.

இவற்றையும் மீறித்தான் ஒரு பெண் தன்னையும், தனது நாட்டையும் விடுவிக்கும் போரில் பங்கு கொள்கிறாள்.

பெண்களைப் போகப் பொருளாக்கி வியாபாரம் செய்து, படுக்கையறைகளில் காட்சிப் பொருளாக்கிக் களிக்கும் சுரண்டல் வர்க்கமும், ஆண் அதிகாரமும் தகர்ந்து விழும்வரை பெண்கள் விடுதலைப் போராட்டம் ஓயமுடியாது.

மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு எப்போது முற்றுப்புள்ளியிடப் படுமோ அன்றுதான் பெண்களை ஆண்கள் சுரண்டுவதற்கும் சாவுமணி யடிக்கப்படும்.

எனவே பெண்கள் விடுதலைப் போராட்டம் என்பது தனிச்சொத்துரிமைச் சமூக அமைப்பைத் தகர்த்திடும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் பிரிக்கப்படமுடியாத பகுதியாகும்.

ஈழத்திலும் தேச விடுதலையை மட்டுமன்றி சமூக, பொருளாதார விடுதலையையும் இலக்காகக் கொண்ட தொழிலாளி வர்க்கத் தலைமையில் ஈழப் பெண்கள் ஒன்றுபட வேண்டும்.

''ஒரு கட்டுரையின் முற்பகுதி நன்றாக எழுதி முடிக்கப்பட்டால் மட்டுமே அதன் பிற்பகுதியும் சரியாக எழுதி முடிக்கப்பட முடியும்''

அதேபோலவே தேசவிடுதலைப் போராட்டத்திற்கு புரட்சிகரக் கட்சி தலைமை அளிப்பதன் மூலமே சோசலிச சமூக அமைப்பை ஈழ பூமியில் கட்டியமைக்க முடியும்.

இல்லாவிடில் இன்று அந்நியர் கரங்களில் உள்ள ஈழத்தின்ஆட்சி அதிகாரம் நாளை ஈழத்தின் உழைக்காத, சுரண்டுகின்ற வர்க்கங்கள் கரங்களுக்குச் சென்றடையும்.

இத்தகைய சுரண்டல் தனத்திற்கு தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் பெண்களும் பலியாவது தொடர் நிகழ்வாகி விடும்.

எனவே தேச விடுதலையையும், சோசலிச நிர்மாணத்தையும் இலக்காகக் கொண்ட புரட்சிகரக் கட்சியின் வழிமார்க்கத்தில் மட்டுமே ஈழப்பெண்கள் போராட்டப் பாதையில் ஏறுநடை போட வேண்டும்.

**மக்கள் யுத்தப்பாதையில் அணிதிரள்வோம் !**

**தேசப்பகைவர்களை முறியடிப்போம் !!**

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூலி

எண்ணெய் விடாது எந்நாளும் நீயிருந்தால்
மண்ணை உழுவோ மெனினும்—உன்னை
சுரண்டி முடிப்பதற்குள் நீயிறந்து போகாமல்
பிரண்டு சொறிப்பதுதான் கூலி

## அய்க்கியப்படுவோம்

திருமணஞ் செய்துவிட்டு இன்னணைக்கு மன் அணைத்தால்
ஒரு நாளும் பிள்ளை பிறக்காது—கரு நிறைந்த
திறமான திட்டங்கள் இருந்தும் நீ தனித்திருந்தால்
பிறவாது புரட்சிக் குழந்தை.

## பலாத்காரப் புரட்சி

மயிலே—மயிலே இறகு போடென்றால்
மயில்தான் இறகு போடுமோ...வெயிலில்
வாடுமோர் கூட்டம் வாய்கிழியக் கத்தினாலும்
போடுமோ முதலாளித்துவம் சோறு

## மலையகப் பாட்டாளி

காட்டை அழித்து கழனியாக்கிய உன்னை
நாட்டை விட்டே துரத்துகின்றான்—கேட்டை
உள்ளத்தால் உணர்ந்து துடைத்தெறியா விட்டால் நீ
கள்ளத்தோணிதான் காண்.

## சமூகத் துரோகிகள்


வீட்டை உடைத்து பின் பூட்டையும் உடைத்து
நோட்டை எடுத்தவன் அகப்படவே—நாட்டை
பிரித்தெடுக்கும் கூட்டத்தில் பழியைப் போடுகிறான்
தரித்திரம் கெட்ட தறுதலை.

## சீதனம்

கன்னியவள் கட்டழகி களங்கமில்லை குணமோ
தன்னிகரில்லா தங்கம்தான் என்மகனின்
வேதனம் ஓராயிரம் வேண்டும் அவனுக்கு
சீதனமாய் நூறாயிரம்

—தோழர் செந்தாரகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புத் தோழிக்கு,

புரட்சிகர வாழ்த்துக்கள்.

உனது அன்புமடல் கிடைத்தது. அதில் உனது உள்ளக்குமுறல்களைக் கொட்டியிருந்தாய். ஈழதேச விடுதலைக்காய் நீயும் உனது தோழியரும் வீட்டைவிட்டு வெளியே வந்ததும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பெண்கள் அமைப்பான எம்மோடு தொடர்பு கொண்டதும், வீடுதிரும்பமாட்டோம். வீட்டுக்குத் திருப்பி அனுப்பினால் செத்துமடிவோம் என்று அடம்பிடித்ததும், எமது கொள்கை விளக்கல்களாலும், அறிவுரைகளாலும் தைரியம் கொண்ட நீங்கள் வீடு திரும்பிச்செல்ல இணங்கிக் கொண்டதும், உங்கள் பெற்றோர்கள் உடன் பிறப்புக்களுடன் உங்களை அனுப்பிய பிற்பாடு நீ எழுதிய முதற் கடிதம் எம் இதயத்தை உருக்கியது.

பெண் பிள்ளைகள் தற்போது வீட்டைவிட்டு வெளியேறுவதும், ஈழதேசத்தை மீட்பதற்காக அணி திரள்வதும் தவிர்க்க முடியாத அவசியத்தின் நிகழ்வுகள் என்பதை அனைவரும் அறிவர். அவசியம் எதுவோ அதைத் தெரிவு செய்து கொள்வதுதான் சுதந்திரம் என்பதையும் உனக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

ஆனால் உங்களது பெற்றோர்கள் உடன்பிறப்புக்கள் அழுது கலங்கி, நீங்கள் எங்கே சென்றிருக்கக்கூடும் என்பதை ஊகித்துக் கொண்டு உங்களைத்தேடி வந்ததும், உங்களை மீண்டும் வீட்டுக்கு அழைத்துச் செல்லாமல் போகவில்லையென்று கலங்கிப் புலம்பியதும், நீங்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அங்கங்களில் ஒன்றாகிய ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியினரிடம் தான் சென்றுள்ளீர்கள் என்பதை அறிந்து நிம்மதிப் பெருமூச்சும் அமைதியும் அடைந்ததும் எமக்கு ஆறுதலைத் தந்தது.

இங்கு விடுதலைக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொள்ளும் இயக்கங்களில் ஒரு சில ஏனைய இயக்கங்களைப்பற்றிக் குறை கூறுவதையும் பொய்ப்பிரச்சாரம் செய்வதையும், பழிசுமத்துவதையும், பயமுறுத்துவதையும்—தங்களது கொள்கையாகக் கொண்டுள்ள வேதனைக்குரிய நிகழ்ச்சிகளின் மத்தியில் உங்கள் பெற்றோர் உடன்பிறப்புக்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப்பற்றிச் சரியாகப் புரிந்துகொண்டிருப்பது எமக்கு அமைதியைத் தருகின்றது. எமது புரட்சிகர பணிக்கான உறுதியைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மக்களுக்காகப் போராடுபவர்கள் மக்கள் சக்தியில் நம்பிக்கை கொண்டவர்கள். குழந்தை தொடக்கம் கிழவி வரை போராட்டத்தில் தங்களுக்கு இயல்பான வழியில் பங்கெடுக்காவிட்டால் ஈழப் புரட்சியின் வெற்றி சாத்தியமில்லை எனறு கருதுபவர்கள். எமது விடுதலைப் போராட்டம் அவ்வளவிற்குக் கடினமானதும், ஆபத்தானதும், துன்பங்கள் நிறைந்ததும் என்ற ஆழமான பார்வையின் சிந்தனைகள் இவை. எமது நம்பிக்கை வீண் போகவில்லை என்பதற்கு உங்கள் பெற்றோர், உடன்பிறப்புக்கள் எங்கள் கட்சியின் மேல் கொண்ட நம்பிக்கையும், உறுதியும சிறந்த எடுத்துக்காட்டு. இதைத் தவிர வேறு என்ன எமக்கு ஆறுதல் அளிக்கக்கூடியது.

பிள்ளைகள் வீட்டிலிருந்து கொண்டே இயக்கத்திற்காகப் பணிபுரியட்டும். அதற்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம் என்று உறுதிமொழி சொன்ன தோழர்களது பெற்றோர்களில் சிலர் உங்களைத் தடுத்துவிட்டதாகவும், அதனால் நீயும் உனது தோழியர்களும் விரக்தியுற்று இருப்பதாகவும் நீ எழுதியிருந்தாய்.

எங்களை அழிக்க இனவெறிக் கைகள் எமது கழுத்தை நோக்கி நாளுக்கு நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நாங்கள் என்ன செய்யத் தயாராகவுள்ளோம் என்பதைக்கூடச் சிந்திக்காமல் இருப்பது எமது அழிவுக்குத்தான் வழிவகுக்கும் எமது கழுத்தை நெரிக்கவரும் இனவெறிக் கரங்களை தறித்துப்போட எமது கைகளில் அரிவாள்களைத் தூக்க உனக்கிருக்கும் உரிமைக்காக நீ வீட்டோடு போராட வேண்டியது அவசியமானது.

ஆயிரம் கைகளாலும் சூரியனை உதிக்காது தடுக்க முடியுமா? நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும், ஞானச் செருக்கும் எமது தோழியர்களை மக்கள் வெகு விரைவில் அடையாளம் கண்டுகொள்வார்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்கள் நாம், யாருடைய பழிமொழியும், வசைமொழியும், பொய்ப்பிரசாரமும் மிரட்டல்களும் எம்மை எதுவுமே செய்துவிட முடியாது. எதிரியின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும், சித்திரை வதைகளுக்கும் அஞ்சாத எமக்கு இந்த வசை மொழிகள் மிரட்டல்கள் என்ன செய்யுமோ போற்றும் மனிதர்கள் போற்றட்டும் நெஞ்சில் பொறுமை இல்லாதவர் தூற்றட்டும் உன் பணி தொடரட்டும்.

அண்ணா மிரட்டுகிறார், அப்பா, அம்மா தடுக்கிறார்கள். அரசியல் வேலை செய்ய விடுகிறார்களில்லை. அதனால் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது என்று நீ எழுதியிருந்தாய். அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். சொல்வார்கள். ஆனால் ஒன்றை மட்டும் உனது சிந்தனைக்கு முன் வைக்கிறேன். பல பெண்கள் தங்கள் பெற்றோர்களைக் கேட்டா அண்ணாக்களின் அனுமதி பெற்றா காதலிக்கிறார்கள். தாய் தந்தை சகோதரர்களுடைய விருப்பம் இல்லாமலே ஒரு பெண் தான் விரும்பிய ஒருவனைக் காதலிக்கிறாள். யார் தடுத்தாலென்ன மிரட்டினாலென்ன, அடித்தாலென்ன, உதைத்தாலென்ன, ஏசினால் என்ன தனது எதிர்கால வாழ்வை நிர்ணயிப்பதற்கான தனது உரிமைக்காகப் போராடுகிறாள். அதற்காக அவள் எந்தத் துன்பத்தையும் தாங்கிக் கொள்கிறாள். ஏன் சாப்பிடாது கூடக் கிடக்கிறாள். தற்கொலை செய்து செத்துவிடுவேனென்று கூடப்பயமுறுத்துகிறாள். ஏன் சிலர் துரதிஷ்டவசமாகத் தற்கொலை கூடச் செய்து கொள்கிறார்கள் அல்லது வீட்டைவிட்டே காதலனோடு ஓடி விடுகிறார்கள். இவ்வளவிற்கு அவளுக்கு எங்கிருந்து அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுத்துணிவு பிறந்தது? யார் அவளுடைய நெஞ்சத்தில் தைரியத்தைப் பதித்தார்கள். அது அவளுடைய உணர்வு தனது எதிர்கால வாழ்வை நிர்ணயிப்பதற்கான அவளுக்குள்ள உரிமையின் போராட்ட உணர்வு. அந்த உணர்வில் எழுந்த நெஞ்சுத்துணிவு, தைரியம் அது. அதையாரும் அவளுக்கு ஊட்டியதில்லை. அது அவளுக்கு ஏற்பட்ட தேவையில் இருந்து பிறந்தது.

அதே போல இன்றைய சூழ்நிலையில் உனக்கு வேண்டியது விடுதலை. வர்க்க ஒடுக்குமுறை, ஆண் ஆதிக்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை போன்றவைகளால் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களில் இருந்து விடுதலை பெற வேண்டுமென்றால் ஈழதேச விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் கலந்து கொள்ள வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட உனக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை யார் பறித்தாலும் அதற்காக நீ போராடு. உனது வீடாக இருந்தாலென்ன நீ வாழும் சமூகமாக இருந்தாலென்ன நீ போராடவேண்டும். நீ உனது உரிமைக்காகப் போராடவில்லையென்றால் உனக்கு விடுதலை இல்லை.

உங்களை வீட்டிற்குத் திருப்பி அனுப்பியதற்காக நீ குறை கூறி இருந்தாய். நாட்டிற்காகப் போராட வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்த உங்களை திருப்பி அனுப்பும் அளவிற்கு நாம் பலவீனமானவர்களல்ல. நீங்கள் வயதில் மிகக் குறைந்தவர்கள். அறிவில் வளர வேண்டியவர்கள். அனுபவத்தைப் படிக்க வேண்டியவர்கள். வீட்டை விட்டு வெளியேறுவதால் மாத்திரம் இவைகளைப் பெற்றுவிட முடியாது. **போராட வேண்டியவர்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதும் தவறானது. இவைகளுக்கப்பால் உனக்கு தேச விடுதலைப் போராட்டத்தில் பணிபுரிய உனது வீட்டில் வலுகட்டாயமாக உரிமை மறுக்கப்படுமென்றால் அதற்காக உனது வீட்டோடு போராடு.** எம்மோடு தொடர்பு கொள். முழுநேரப் பணியாளர்களை எதிர்நோக்கி நாம் காத்திருக்கிறோம். ஈழதேச விடுதலைக்காய் பணிபுரிய முன்வருவது உனது கடமை. கடமையைச் செய்ய உனக்குள்ளது உரிமை. உரிமை மறுக்கப்படும் என்றால் அதற்காகப் போராடு. உன்பலத்தை, நெஞ்சுத்துணிவை அதில் காட்டு. உனது பணிக்காக உனது மண் உனது தேசம் காத்திருக்கிறது. அதில் உனக்கு நேசம் இருக்கிறதா?

இது உன் போன்றவர்களுக்கு விடப்படும் சவால். சவாலை ஏற்க நீ தயாரா?

**நெருப்பைச் சுமக்கும் நெஞ்சங்களே! ஈழப் பெண்களே! காளைய நாயகிகளே!**

**போராடுங்கள்! விடுதலை பெறுங்கள்!!**

மீண்டும் சந்திப்போம்

**வெற்றிவரை புரட்சி!**

உன் அன்புத் தோழி
ஈழமலர்
இவ்வண்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சீனப்புரட்சியில் வீரமிகு பெண்கள்! ★

ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், தரகுமுதலாளித்துவம்

இந்த ஆதிக்கமலைகளை சீனமக்கள் என்றென்றைக்குமாகத் தகர்த்துவீசினர்.

**மார்க்சிச/லெனினிய தத்துவார்த்த ஒளியில் சீனக்கம்யுனிஸ்ட் கட்சியின் தலைமைத்துவத்தின் கீழ் சீனமக்கள் சிவப்புச் சீனத்தை வென்று பெற்றனர்.**

**சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் ஆணையின் கீழ் செயல்பட்ட மக்கள் விடுதலைப் படையில் ஆண்களும், பெண்களும் இணைந்து தமது நாட்டின் தலைவிதியைத் தாமே நிர்ணயித்தனர்.**

சீனப்புரட்சியில் சீனத்தின் ஆற்றல்மிகு பெண்களது அனுபவங்களை ஈழத்தின் புரட்சியில் செழுமைமிகு பங்கு கொள்ளத் தயாராகும் ஈழப்பெண்களும் கற்றுக்கொள்வது அவசியமானதாகும். சிந்தனை என்னும் பெண்களுக்கான சஞ்சிகையில் வெளிவந்த ஆக்கத்தை இங்கே பிரசுரிக்கிறோம்.

**''நாங்கள் போராடும்போது கற்போம், கற்கும்போது போராடுவோம்''**

## லூயிஸ்ட்ராங் எழுதுகிறார்

சீனத்தில் பெண்களின் உரிமைக்காக நடந்த போராட்டம் எழுச்சிமிக்கதாகும். அன்று சீனத்தில் விவசாயிகள் பழமையில் ஊறியவர்கள். உணவுக்காகத் தங்கள் பெண் குழந்தைகளை விற்க முற்படுபவர்கள். உயர் குலப் பெண்கள் என்று கருதப்படுபவர்கள், வீட்டை விட்டு வெளியேவராமல் நான்கு சுவர்களுக்குள்ளேயே அடைந்து கிடப்பார்கள்.

## புதிய தலைமுறை

இத்தகைய சமூகச் சூழலில் பெண்களிடையே ஒரு புதிய தலைமுறை உருவாயிற்று. இப்பெண்கள் ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தினர். சீருடை அணிந்து சீன தேசியப் படையின் அணிகளோடு சேர்ந்து பிரசாரப் படையாகத் தாங்களும் நடந்தனர். கிராமங்களில் புதிய எழுச்சியை உண்டாக்கினர். பெண்களின் சங்கங்களை அமைத்தனர். அவர்களுடைய இந்தப் புரட்சிகரமான செயல்களுக்காகப் பலர் உயிரிழக்க நேரிட்டது. இந்தப் பெண்கள் தங்கள் நீண்ட கூந்தலைப் 'பாப்' செய்துக்கொண்டிருந்ததால் அந்த ஒரே அடையாளத்தைக் கொண்டு அத்தகைய பெண்கள் நிச்சயம் புரட்சியாளர்கள்தான் என்று கொல்லப்பட்டனர்.

நான் முதன் முதலாக சந்தித்த பெண் புரட்சியாளர்கள் ஷாங்காய், ஊசாங் ஆகிய நகரங்களைச் சார்ந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள். சுமார் இருபது பெண்கள் ஹேன்கௌவில் நடந்தசீனத் தொழிலாளர் சம்மேளனத்திற்கு வந்திருந்தனர்.

## வாங்–யெ–கின்

பெரும்பாலான தொழிலாளர்களைப் போலவே வாங்-யெ-கின் என்ற பெண்ணும் சமீபத்தில் தான் ஓரளவுக்குப் படிக்கமட்டும் கற்றிருந்தாள். எழுதத்தெரியாது. 8 வயதில் பஞ்சாலையில் வேலைக்குச் சேர்ந்தாள். முதலில் வேலைகற்கும் தொழிலாளியாக (அப்ரெண்டிஸ்) இருந்தபோது சம்பளமே கிடையாது. ஆறு மாதங்களுக்குப் பிறகு அவளுடைய ஒரு நாளையக்கூலி 6 சென்டு. தற்போது நல்ல திறமையான உழைப்பாளி என்ற நிலையில் அவளுடைய பன்னிரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிநேர உழைப்பிற்கு அவளுக்குத் தினமும் கிடைக்கும் கூலி 21 சென்டு.

## நினைவுகள்

''நான் சிறுமியாக இருந்தபோது வேலையில் தவறுகள் செய்தால் அங்கிருந்த போர்மென் என்னை அடிப்பார், ஆனால் இப்போது அடிப்பது அபராதத்தொகை விதிப்பது போன்ற கொடுமைகளிலிருந்து தொழிற் சங்கம் எங்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது.

''தொழிற் சங்கம் ஏற்படுவதற்கு முன் எங்கள் ஒவ்வொருவருக்கும் படிக்கத் தெரியாது. பிறகு சங்கம் மதிய உணவு இடைவேளையில் தொழிற்சாலைக்கு ஆசிரியர்களை அனுப்பியது. சாப்பாட்டை வேகமாக முடித்துக்கொண்டு படிக்கக் கற்றுக் கொள்வோம். ஆனால் பேனா, காகிதம் போன்ற வசதிகளும் போதுமான நேரமும் இல்லை என்பதால் எழுதக் கற்றுக்கொள்ள முடியவில்லை. சங்கம் தடைப்பட்டுவிட்டது. அதனால் எங்கள் கல்வியும் தடைப்பட்டுவிட்டது.

''தேசியப் படைகள் ஷாங்காய் வந்த புதிதில் எல்லாத் தொழிற்சாலைகளிலும் சங்கம் இல்லை. ஆனால் அதன்பிறகு எல்லா இடங்களிலும் தொழிற்சங்கங்கள் அமைக்கப் பட்டன. சியாங்கை-ஷேக் இச்சங்கங்களைத் தடைசெய்யுமுன்பு எங்கள் தொழிற் சங்கக் கூட்டங்கள் பகிரங்கமாகச் செயல்பட்டன. ஆனால் தடைசெய்யப் பட்டபின்னர் ரகசியமாகச் செயல்படுகின்றன என்றார் வாங்-யே-கின்.

ஷாங்காய் பிரதிநிதிகள் அதிகம் படித்தவர்களில்லை. ஆனால் தேசிய அரசின் கீழ் தங்களுக்குக் கிடைக்கக்கூடியது என்ன என்பதையும் தொழிற் சங்கங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

## சுரண்டப்படும் பெண்கள்

''தேசிய அரசினால்தான் எங்களுக்குத் தொழிற்சங்கங்கள் கிடைத்தன. அதன் தலைவர்கள் சுட்டுத் தள்ளப்படுகிறார்கள். நாங்கள் அனைவரும் ஒன்றுபட்ட அமைப்புத் தான் தொழிற்சங்கம் என்பது. இது எங்கள் தேவைக்காகப் போராடுகிறது. நாங்கள் 8 மணிநேர வேலையும், ஊதிய உயர்வையும் எதிர்பார்க்கிறோம். குறிப்பாகப்பெண்களுக்கு இவை தேவை, அதிகமாகச் சுரண்டப்படுபவர்கள் பெண்களே.

## தொழிற் சங்கம்

''தொழிற்சாலையில் பன்னிரண்டு முதல் பதினாறு மணிநேரம் வரையில் உழைப்பதோடு பெண்கள் வீட்டிலும் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும். தன்னையும்பார்த்துக்கொள்ளவேண்டும். இப்படி நீண்ட நேர வேலைகளை எத்தனை காலந்தான் செய்ய முடியும்?

## பெண்கள் கோரிக்கைகளை முன் வைத்தனர்

தொழிற்சாலைகள் தோறும் பள்ளிகள் நடத்தவேண்டும் குழந்தை பராமரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மருத்துவமனைகள், வேண்டும். அத்துடன் தொழிற்சாலைகளில் அளிக்கப்படும் கொடுமையான வெட்கக்கேடான தண்டனைகளை ரத்துசெய்ய வேண்டும்.

இப்பெண்கள் தொழிலாளர் மாநாடு முடிந்து ஷாங்காய் திரும்பும்போது ஷியாங்கை-ஷேக்கின் ஆட்களிடம் சிக்கக்கூடும். அவர்கள் கொலையும் செய்யப்படலாம். தங்களுக்கு என்ன ஆபத்து நேரலாம் என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

தாங்கள் உலகு தழுவிய தொரு இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதால் ஏற்பட்ட உற்சாகம் அவர்கள் சாவைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆயினும் இத்தகைய இளம் பெண்கள் பலர் காண்டனிலும் ஷாங்காயிலும் சியாங்-கை-ஷேக் அரசின் கையில் சிக்கி வீரமரணம் எய்தியிருக்கின்றனர்.

## யாங்-வின் ஸியா

இன்னும்-ஊசாங் என்ற பகுதியில் ஒரு நெசவாலைத் தொழிலாளியான யாங்-வின்-ஸ்யா என்ற பெண் தன் வாழ்க்கை அனுபவங்களைக் கூறினாள். அவள் தனது 10-வது வயதில் ஒரு நாளைக்கு 5 செண்ட் கூலிக்கு வேலைக்குச் செல்லத் தொடங்கினாள். 1926-ல் சங்கம் தோன்றியதும் அவள் அதில் சேர்ந்தாள்.

## குறைவான கூலி

''கடந்த காலத்தில் நான் அனுபவித்த துன்பங்கள் மிகக்கொடுமையானவை. அதைப் பற்றி இப்போது பேசத் தேவையில்லை, தொழிற்சாலைகளில் ஆண்களைவிடப் பெண்களுக்குக் கூலி குறைவாகக் கொடுக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காரணத்திற்காகவே அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள். அழகான இளம் பெண்களுக்கு சில சலுகைகள் கொடுத்து கொஞ்சக் காலம் நன்றாக நடத்துவார்கள். காரணம் அங்கு வேலை செய்யும் மேற்பார்வையாளர்களுக்கும் (போர்மேன்) உயர் அதிகாரிகளுக்கும் அழகான பெண்களைப் பிடிக்கும். அழகற்ற பெண்கள் கொடுமைப் படுத்தபடுவார்கள். ஆண்களை நடத்துவதைவிடப் பெண்கள் தாழ்வாக நடத்தப்பட்டார்கள்.

## நீண்ட வேலை நேரம்

''எங்கள் சங்கம் ஆண் தொழிலாளர்கள் ஆறுபேரால் இரகசியமாகத் துவங்கப்பட்டது. தேசிய அரசு வந்ததும் பகிரங்கமாகச் சங்கம் செயல்பட்டது. எங்களுக்குத் தொழிற்சங்கத்தால் நன்மைகள் விளைந்துள்ளன. சங்கம் அமைத்தபின் போர்மென் எங்களை நடத்தும் விதத்தில் பெரும்மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

## முன்பு ஒரே வழி துறவறம்

''பழைய சீனப் பழக்க வழக்கங்களின்படி பெண்கள்வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது. பெண்களின் பாதங்கள் சிறியதாக இருந்தால் தான் அவர்களை மணக்க, ஆண்கள் முன் வருவார்கள் என்று அவளுடைய பாதங்களை இறுகக் கட்டுவார்கள். கட்டாயப்படுத்திப் பெண்களுக்குத்திருமணம் செய்து வைப்பார்கள். இதனால் மணவிழாவில் மனக் கசப்பு ஏற்படும். தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும்போது, போர்மென்கள் கேவலமாக நடத்துவார்கள். அதோடு பெண்களுக்கு வீட்டு வேலையும் செய்யவேண்டிய நிலை. சங்கங்களில் சேர்ந்தால் அவர்களுடைய கணவன்மார்களே எதிர்த்தனர். கணவனின் குடும்பத்தாரும் இவர்களை அடக்கி வைத்தனர். அறியாமை,கல்வியின்மையும் அவர்களை மேலும் பாதித்தன. முன்பெல்லாம் இந்தக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவதற்குப் பெண்களுக்கு ஒரேவழி துறவறம் மேற்கொள்ளுவதுதான். ஆனால் அவர்கள் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறவில்லை. மாறாக, புதுவிதமான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். தேசிய சீனப்படைகள் பெண்களை ஒன்று திரட்டி, அவர்களை ஸ்தாபன ரீதியாகப் பலப்படுத்தினர். அது வரையில் பெண்களுக்கு எந்தவிதமான சுதந்திரமும் இல்லை.

## பெண்களை ஒன்று திரட்டினோம்

''நாங்கள் படைகளுக்குப் பின்னால் செல்வோம். ஆனால், நாங்கள் போரில் ஈடுபடுவதில்லை. நாங்கள் போர்ப்படையின் அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்கள். படைகள் புதிய இடங்களில் அரசாங்கத்தை ஏற்படுத்தும்போது நாங்கள் பெண்களை ஒன்று திரட்டுவோம். இதற்காக நாங்கள் பெண்கள் அதிகமாக இருக்கும் இடங்களுக்கு, குறிப்பாக, வீடுகள், கடைவீதிகள் போன்ற இடங்களுக்குச் செல்லுவோம். பெண்களைச் சந்தித்துப் பேசுவோம். அதன் பிறகு ஆங்காங்குப் பெண்கள் சங்கங்களை அமைத்துவிட்டு அடுத்து வேறிடத்திற்குச் செல்வோம். பெண்களின் அமைப்புகள் தத்தம் மாவட்டங்களில் பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்ளும்'' என்றார் யாங்.

''இந்த விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்ணிடம் நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?'' என்று நான் கியாங்-வின்-சியாவைக் கேட்டேன்.

## புதுச்சட்டத்தை விளக்கினோம்

''முதலில் நாங்கள் வடபகுதிப் படைகளுக்கும் எங்கள் தேசியப் படைகளுக்கும் இருக்கும் வேறுபாட்டை விளக்குவோம். நாங்கள் அவர்களைக் கொடுமைகளிலிருந்து காப்பதற்கும் அவர்களிடையே ஒரு புது மனோநிலையை உருவாக்கவும் வந்திருக்கிறோம் என்பதை விவரிப்போம். மேலும் **ஆண், பெண் இருபாலரும் சமம். ஒரு பெண் என்பவளுக்குச் சிந்திக்கத்தெரிந்த ஒருதனிநபர் என்று விளக்குவோம். பெண்களுக்குக் கணவன் பால் மட்டுமல்ல, சில சமுதாயக் கடமைகளும் உண்டு என்று எடுத்துச்செல்வோம் மேலும் திருமணம் சமந்தபட்டவரையில் பெற்றோரிடம் ஆலோசனை கேட்பதுதவறில்லை. ஆனால் அதற்காகப் பெற்றோரே திருமணம் சம்பந்தப் பட்ட எல்லாவிஷயங்களையும் தீர்மானிப்பது சரியல்ல.** இளைஞர்களுக்குத் தத்தம் வாழ்க்கைத் துணையைத்தேர்ந்தெடுக்க முழுஉரிமை உண்டு என்பதையும் விளக்குவோம். மேலும் பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் உரிமை உண்டு என்று புதுச்சட்டத்தையும் விளக்கினோம்.'' என்றார் கியாங்.

## விவசாயப் பெண்களிடையே

'இந்த விவசாயப் பெண்கள் இவற்றைக் கேட்டு என்ன சொல்கிறார்கள்? உங்களை வீட்டை விட்டு வெளியேறச் சொல்கிறார்களா? கடுமையாகநடந்து கொள்கிறார்களா? அவர்களுடைய கணவன்மார் உங்களை மரியாதை இல்லாமல் நடத்துகிறார்களா? என்றேன் நான்.

இதற்கு கியாங் ''அப்படியில்லை. அவர்கள் எங்களுக்குத் தேநீர் கொடுத்து உபசரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்கள். நாங்கள் சொல்வதெல்லாம் சரி என்று சொல்லி ஆமோதிப்பார்கள்.'' என்றார், கியாங் மேலும் தொடர்ந்தார்—

## பாதங்களைக் கட்டக்கூடாது

''பஞ்சாலைகளில்தான் நாங்கள் பெண்களின் பாதங்களைக் கட்டக்கூடாது என்ற எங்கள் பிரசாரத்தைத் துவங்கினோம். இப்பெண்கள் நீண்ட நேரம் நின்றுகொண்டே வேலை செய்கிறார்கள். அதனால் தங்கள் பாதங்களைச் சிறுவயதிலேயே கட்டிப்போட்டது தவறு என்பதை அவர்கள் உணர்கிறார்கள். பெரும்பாலானோருக்கு இனி ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் அவர்கள் தங்கள் பெண்கள் கால்களையாவது கட்டாமல் காப்பாற்றவேண்டும். என்று நினைக்கிறார்கள்.

## புரட்சியின் திடீர் தாக்குதல்

முன்பெல்லாம் பெண்கள் 'தங்கலில்லி' போன்ற பாதங்களையுடையவளென்றால் அவளுக்கு எளிதில் திருமணம் நடக்கும் என்ற நிலைமை நிலவியது. அப்பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் சீர்நிறையக் கொடுப்பார்கள். ஆனால் தற்போது தொழிற்சாலையில் வேலை பார்த்து ஊதியம் பெறும் பெண்ணையே அவர்கள் விரும்புகிறார்கள். தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்ணுக்குக் கால்களும் பாதங்களும் இயல்பான வளர்ச்சி பெற்றிருப்பதுதான் நல்லது. பொருளாதார நிர்ப்பந்தமே இப்போது பெண்களின் பாதங்களைக் கட்டிப்போடுவதற்கு எதிராக உள்ளது. இருப்பினும், புரட்சியின் திடீர்த் தாக்குதல்தான் இந்தப்பழக்கத்தைஅடியோடு ஒழிக்க உதவியது. இந்தப் பாதத்தைக் கட்டும் பழக்கத்தை ஒழிக்கும் இயக்கம் தொடங்கியதும் ஆயிரக்கணக்கான பெண்கள் இதில் சேர்ந்தார்கள். இந்த முயற்சிக்குப் பெருத்த உற்சாகமும் மிகுந்த வரவேற்பும் இருந்ததை உணர்ந்த பெண்கள் முதலில் தங்கள் கால்களைக் கட்டியிருந்த துணியைப் பிய்த்தெறிந்துவிட்டுப் பின்னர் மற்றப் பெண்களையும் அவ்வாறே அவிழ்த்து எறியும்படி வற்புறுத்துவார்கள்.

தேசீய இயக்கத்தால் கவரப்பட்டு, புரட்சிகர உணர்வைப் பெற்ற பல பெண்களை நான் சந்தித்தேன். அவர்களில் பலர் சொன்னார்கள்:

## புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

''நாங்கள் கிறிஸ்தவர்கள். ஏசுநாதரின் போதனைகள் மிகச்சிறந்த அறிவுரைகள் என்று இன்னமும் நம்புகிறோம். ஆனால் அவரது போதனைகள் நீண்ட காலத்திற்கு முந்தியவை. நவீன சீனத்திற்குத் தேவையான அவசியமான போதனைகளை அவை பிரதிபலிக்கவில்லை. நாம் நல்லவர்களாயிருந்தால் மட்டும் போதாது. அப்படி நல்லவர்களாயிருப்பது பல சந்தர்ப்பங்களில் பெரும் அநீதிகளுக்குக் கூட அடிபணியும்படிச் செய்துவிடுகிறது. அநீதிகளைத் தகர்க்க நாம் நல்லவர்களாயிருந்தால் மட்டும்போதாது. அதை எதிர்த்தும் போராடவேண்டும். அதற்கு முதலில் பழைய பொருளாதார அமைப்பைத் தகர்த்து, மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு ஊக்கமளிக்கும் புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். ஆண் பெண் சமத்துவம் சட்டத்தால் மட்டும் உருவாக முடியாது. எல்லா மக்களுக்கும் உண்மையான சுதந்திரத்தை அளிக்கும் புதிய சமுதாயத்தை உருவாக்கினால்தான் உண்மையான ஆண் பெண் சமத்துவம் ஏற்படும். அவ்வாறே மதம் கூறுகிறது என்பதற்காக அனைவரும் நல்லவர்களாக இருக்க முடியாது. அடிப்படையில் மாறுதல் ஏற்படாமல் மக்கள் மன மாற்றம் ஏற்பட முடியாது.

## உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும்

நீங்கள் எத்தகைய சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறீர்கள்? என்று நான் கேட்டேன்.

''உற்பத்திச் சாதனங்களனைத்தும் சமூகத்திற்குச் சொந்தமாயிருக்க வேண்டும். அவற்றை இயக்குவதோ அதன் பலன்களை அனுபவிப்பதோ எல்லாம் பொதுவுடைமையாக இருக்க வேண்டும்'' என்றாள் அங்கு இருந்த பெண் ஒருத்தி. எங்கள் புரட்சி எல்லா நாடுகளிலும் நடக்கும். உலகத் தொழிலாளர்களின் உயர்வைக் கருத்தில் கொண்டிருக்கும். நாங்கள் விவசாயத் தொழிலாளர்களின் சங்கத்துடன் இணைந்து தான் செயல்படுகிறோம். ஏனென்றால் பெண்கள் விவசாயிகளின் அமைப்போடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவேண்டும் என்று நம்புகிறோம். விவசாயிகள் நலத்தோடுதான் பெண்களின் நலமும் அமைதியும் இணைந்திருக்கின்றது'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சி. ஐ. ஏ. உளவாளிகள்: கடத்த

எமது தலைமைக் கட்சியான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் படையான மக்கள் விடுதலைப் படையினர் (P.L.A) சி.ஐ.ஏ. என சுருக்கமாகக் குறிப்பிடப்படும் மத்திய புலனாய்வு நிறுவனத்தின் இரு உளவாளிகளை கடத்தினர். இந்த நிகழ்வானது ஈழ தேச விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசிய குணாம்சத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தேச விடுதலைக்காக மட்டுமின்றி சமூக, பொருளாதார விடுதலைக்காகவும் போராடும் ஈழ மக்கள் சர்வதேச புரட்சிகர படைவரிசையின் ஒரு பிரிவினர் என்பது ஏகாதிபத்தியங்களுக்கு உணர வைக்கப்பட்டுள்ளது.

ஈழப் புரட்சிவாதிகளின் மனிதத்துவ உணர்வுகளையும், ஈழ விடுதலைப் புரட்சியின் நியாய பூர்வமான தன்மையையும் சர்வதேசமெங்கும் பிரகடனப்படுத்தும் நிகழ்வாக சி.ஐ.ஏ. உளவாளிகள் கடத்தப்பட்டது அமைந்துள்ளது.

சர்வதேசப் புரட்சிவாதிகள் விடுதலை, சுபீட்சமான வாழ்வு என்பவற்றுக்காக மக்களை நேசித்து, மக்களுடன் வாழ்ந்து போராடும் மாமனிதர்கள் என்பதை ஏற்கனவே எமக்கு முன் உள்ள புரட்சிவாதிகளின் மகத்துவமிக்க வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. இப்போது ஈழப் புரட்சிவாதிகளான நாமும் புரட்சிவாதிகள் என்றால் யார் என்ற வினாவுக்கு நடைமுறை மூலம் விடையளித்திருக்கிறோம். ஆனால் இது ஆரம்பம் மட்டுமே. தொடரப்போகும் புரட்சிவாதிகளினதும் அவர்களது தலைமையிலான ஈழமக்களினதும் வரலாற்று படைப்பாக்கச் செயல் முறையில் இது ஆரம்பம் மட்டுமே ஆனாலும் இது மிகவும் சிறப்பான ஆரம்பங்களில் ஒன்றாகும்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆலோசகர்கள் என்கின்ற போர்வையில் பல வருடங்களாக ஈழத்தில் நடமாடிய இந்த இரு உளவாளிகளும் அப்பாவிகள் என அறிக்கைவிட்டவர்களையும் இவர்களது பின்னணியில் உள்ள சக்தியையும் ஈழமக்கள் மட்டுமன்றி முற்போக்கு, ஜனநாயக சக்திகளும் அறிந்துகொள்ளும் வாய்ப்பையும் இந்த சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

சமூக, பொருளாதார ஆய்வு இராணுவ ஆலோசகர்கள், அபிவிருத்திக்கான திட்டம் தீட்டும் நிபுணர்கள், கலாச்சார பயணிகள் என்று பல்வேறான வழிகளில் சி.ஐ.ஏ. தனது உளவு வேலைகளை நடத்தி வருவது உலகமறிந்த செய்தியாகும்.

உலக சோசலிச முகாமை அழித்தொழித்துவிடவும், சோசலிச திசைவழியைக்



மக்கள் விடுதலைப் படையால் (P.L

சி.ஐ.ஏ. உளவாளிகளான அல

கொண்ட தேசிய ஜனநாயக அரசுகளை குழிபறித்து முறியடிக்கவும் ஏகாதிபத்திய அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ பல சதிவேலைகளை மேற்கொண்டு வருகிறது.

இது மட்டுமின்றி தேச விடுதலைக்காக போராடும் தத்துவார்த்தத் தெளிவற்ற, துணிச்சலற்ற தன்மையுடைய இயக்கங்கள் மத்தியில் ஊடுருவி இந்த இயக்கங்களது துணிச்சலற்ற, அதி தீவிரத்துவங்களுக்கு ஊக்கமளித்து இதன் மூலம் புரட்சி எழுச்சிகளை தடுத்துவிடவும் சி.ஐ.ஏ முயன்று வருகிறது. இந்த இயக்கங்களிலுள்ள நபர்களை விலைக்கு வாங்கி புரட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை கூர்மைப்படுத்தும் குழிபறிப்பு வேலைகள் சி.ஐ.ஏயினால் பல நாடுகளில் நடைபெற்றுள்ளது.

சிறிலங்கா அரசுக்கு இராணுவ, பொருளாதார ஆலோசனைகளையும், பெரும் உதவிகளையும் தாராளமாக வழங்கி அதன் அழித்தொழிப்பு பலத்தை அதிகரிக்கும் அமெரிக்கா

ஈழ மக்க
களை
மக்களுக்
விசுகுவ
போது
அமெரிக்
மேலா
விடுதலை
...
ஆலோச
அப்பா
மக்
பட்ட இ
மாதரச
எனச்
புகைப்ப

# கடத்தல்! ஒரு சர்வ தேசிய வெற்றி! ★



டையால் (P.L.A.) கடத்தப்பட்ட
கிகளான அலன் தம்பதிகள்

ஈழ மக்களுக்கு குடி நீர் வழங்க தனது நிபுணர்களை அனுப்பி வைக்கிறதாம். வியட்னாம் மக்களுக்கு எதிரான கொலைபாதகப் போரில் விசகுண்டுகளை வீசிய அமெரிக்கா, தற்போது விடுதலைக்காக போராடும் மத்திய அமெரிக்க மக்கள் மீது தனது இராணுவ மேலாண்மையை செலுத்திவரும் அமெரிக்கா, விடுதலை[illegible] வேண்டி போராடும் எல்சல்வ[illegible]களில் இதுவரை 40 ஆயிரம்பேரை த[illegible]வல் நாய்கள் மூலம் வேட்டையாடி ம[illegible] கொடிய ஏகாதிபத்திய அமெரிக்க ஆ[illegible]ட்டாளர்கள் போராடும் ஈழமக்க[illegible] தாகம் தணிக்க குடிநீர் வழங்க ஆலோசகர்களை அனுப்பி உதவுகிறதாம். இந்த ஆலோசகர்கள் மிகவும் நல்லவர்களாம். அப்பாவிகளாம்.

மக்கள் விடுதலைப்படையால் கடத்தப்பட்ட இரண்டு சி.ஐ.ஏ உளவாளிகளும் பல மாதமாக ஈழத்தின் பகுதிகளுக்கு ஆய்வு எனச் சென்று பிரதேச அமைப்புக்களை புகைப்படம் எடுத்தனர். சிறீலங்கா கூலிப்படை புகமுடியாத பகுதிகளை ஆய்வுசெய்து பின் சிறீலங்கா அரசுக்கு இராணுவ ஆலோசனைகள் வழங்கினர். இவர்கள் வந்து சென்று புகைப்படம் எடுத்துச்சென்ற பகுதிகளில் சிறீலங்கா கூலிப்படை புகுந்து சுற்றிவளைப்பு நடத்தி தேடுதல் வேட்டை நிகழ்த்தியது.

யுத்த நெருப்பை மூட்டி உலக மக்களை தனது ஏகாதிபத்திய நலனுக்காக தீய்த்துவிடவும் தீர்மானித்துள்ள அமெரிக்காவுக்கு ஏனைய நாடுகளை அபிவிருத்திசெய்து உலக மக்களை சமாதானத்துடன் வாழவைக்கும் நல்ல நண்பன் என நாமம் சூட்டும் ஏகாதிபத்திய விசுவாச அடிமைகளை ஈழ மக்கள் இனம் கண்டு வருகின்றனர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (EPRLF) அதன் வெகுஜன அமைப்புக்களும் ஈழமக்களிடம் இதுவரை நடத்திய பொறுமையானதும், பிடிவாதமானதுமான அரசியல், ஸ்தாபன வேலைகளின் வலிமையை எதிர்ப்படைகளால் துளைத்துவிட முடியவில்லை. சிறீலங்கா கூலிப்படையினரின் குவிந்த தேடுதல் வேட்டையின் மத்தியிலும், இந்த உளவாளிகளை தேடுவதற்காக நேரடியாகவே அதிரடிப்படை எனும் போர்வையில் வந்த சி.ஐ.ஏ. உளவாளிகள் இடையேயும் மக்களைச் சார்ந்து நின்று மக்கள் விடுதலைப்படை (PLA) இக்கடத்தல் சம்பவத்தை வெற்றியாக நிறைவேற்றியுள்ளது.

உறுக்குறுதி வாய்ந்த புரட்சிகர அமைப்பும் அதனைச்சுற்றி அணிதிரளும் வெகுமக்கள் சக்தியும் பகைவனால் நெருங்க முடியாத வலிமையான கோட்டைகளாகும்.

புரட்சிகர அமைப்பு வலிமையாகி, வெகு மக்கள் சக்தி கிளர்ந்தெழும்போது, வெகு மக்களை அணிதிரட்டி, அவர்களை சார்ந்துநிற்கும் புரட்சிகர அமைப்பு தனது தாக்குதல்களை ஆரம்பிக்கும்போது நிஜப்புலிகளைப்போல் தோற்றமளிக்கும் மற்றும் பீற்றிக்கொள்ளும் சகல பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகளாக மாறிவிடுகின்றனர்.

புரட்சிகர தலைமையின் வழிகாட்டுதலின் கீழ் இக்கடதாசிப் புலிகளை வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வெகு மக்கள் சக்தி தூக்கி வீசிவிடும்.

ஏகாதிபத்தியம் அதன் ஏவல் நாய்கள் மற்றும் பிற்போக்குவாத சக்திகள் அனைத்துக்கும் இந்த புரட்சிகர பாடத்தை விடுதலை யுத்தம் மூலம் ஈழமக்கள் கற்றுக்கொடுக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

மக்கள் விடுதலைப் படையின் இப்புரட்சிகர நடவடிக்கையில் பெண் தோழர்களும் பங்கு கொண்டுள்ளதானது எதிர்காலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈழப்பெண்களின் பங்களிப்பின் சிறப்பினை தொடக்கமாகும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வாழ்க!

ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏவல் நாய்களையும் தோற்கடிப்போம்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் துணைவி

# அமைதியற்ற வாழ்விலும் நெருங்கிய சிநேகிதை

**தோழர் ஜூலிஸ்பூசிக்.**

இன்றிரவு என் அருமைக் குஸ்தினாவை அவர்கள் போலந்துக்குக் 'கடின வேலைக்காக' இழுத்துப் போனார்கள். அப்படியென்றால்; கொலைக்களத்திற்கு டைபாய்டு ஜுரத்துக்கு பலியிட, இழுத்துப் போகிறார்கள். அவளுக்கு இன்னும் சிலவாரங்கள்தான் ஆயுள் இருக்கும். இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வாழக்கூடும்.

என்னுடைய வழக்கு கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சிறையில் சுமார் நான்கு வாரங்கள் விசாரணை நடக்கும். அதன் பிறகு முடிவுக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் இருக்கும். இந்தக் குறிப்புக்கள் ஒரு போதும் முற்றுப் பெறாது. அடுத்த சில நாட்களில் சந்தர்ப்பம் கிடைத்தால் முடிந்த அளவுக்கு எழுத முயற்சிக்கிறேன். ஆனால் இன்று எனக்கு எழுத முடியாது. என் மனமும் இதயமும் குஸ்தினா பேரிலேயே லயித்து இருக்கின்றன. **அவள் நற்குணமாது; அன்புள்ள மனைவி; மிகவும் ஆழமான, ஆனால் அமைதியற்ற வாழ்க்கையில் நெருங்கிய விலைமதிப்பற்ற உயரிய சினேகிதை.**

**பல ஆண்டுகளாக நாட்கள் இருவரும் சேர்ந்து வேலை செய்திருக்கிறோம். ஒரு நண்பன் இன்னொரு நண்பனுக்கு உதவுவதுபோல ஒருவருக்கொருவர் உதவி வந்திருக்கிறோம்.** பல ஆண்டுகளாக நான் எழுதும் கட்டுரைகளை முதலில் வாசிப்பவளும், முதலில் விமர்சிப்பவளும் அவள்தான் அவளுடைய கண்கள் என்பேரில் இல்லாத சமயத்தில் எழுதுவதென்பது, எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. பல ஆண்டுகளாக நாங்கள் இருவரும் போராட்டங்களில் இணைபிரியாமல் சேர்ந்தே நின்று வந்திருக்கிறோம். பல ஆண்டுகளாக நாங்கள் நேசிக்கிற நாட்டில் கையோடு கைகோர்த்துச் சுற்றித் திரிந்திருக்கிறோம்; நாங்கள் அனேக சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறோம்; அனேக இன்பங்களைக் கண்டிருக்கிறோம். ஏனெனில் நாங்கள் ஏழைகளின் செல்வத்தை நிறையப் பெற்றிருந்தோம்—எங்கள் உள்ளங்களில் பொதிந்து கிடக்கும் செல்வமே அது.

குஸ்தினாவா? இதோ பாருங்கள், இவள்தான் குஸ்தினா...

''மிஸ்டர் கமிஸார், இப்படிப்பேசி என்னைப் பயமுறுத்தி விடலாம் என்று நினைக்காதீர் அதுதான் என் கடைசி விருப்பம்; பெரிய ஆசை. **இவரைச் சுட்டுக் கொன்றால் என்னையும் சேர்த்துச் சுட்டுக் கொன்றுவிடுங்கள்.''**

**குஸ்தினா! அவர்கள் நம் உயிரைப் பருகலாம்; இல்லையா? ஆனால் நம் காதலையோ, மானத்தையோ அவர்களால் பறிக்க முடியாது.**

[தூக்கு மேடைக் குறிப்பில் இருந்து.]

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈழப் பெண்கள்... ★

★ சர்வதேசப் புரட்சியின் சக்கரங்கள் முன்னோக்கிச் சுழல்கின்றன.

★ இந்தச் சக்கரங்களை பின்னோக்கித் திரும்பும் வலிமை எந்தச் சக்திக்கும் கிடையாது.

மனித குலத்தின் மேம்பாட்டுக்கு எதிரான ஏகாதிபத்தியங்களையும், அவற்றின் சார்பு, மற்றும் தொங்கு சதை நாடுகளின் ஆளும்வர்க்கங்களையும் எதிர்த்து வீரமிக்க போராட்டங்கள் குமுறி வெடித்துள்ளன.

உலகப் பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்படும் தேசமக்களும் தமது வர்க்க, தேச விரோதிகளுக்கு எதிரான போராட்டங்களில் விலைமதிப்பற்ற வெற்றிகளைப் பெற்று வருகின்றனர்.

ஏகாதிபத்திய அமைப்பும், பிற்போக்குத்தனமான ஆளும் வர்க்கங்களும் போராட்ட சம்மட்டியடிகளின் ஓங்கிய வீச்சுக்களால் ஆட்டம் காணுகின்றன.

இத்தகைய புரட்சிகர போராட்டங்களில் பெண்களின் வீரியமிக்க பங்கானது அதிகரித்து வருகிறது.

இதனால் இப்போராட்டங்கள் பரந்துபட்ட வெகுஜன அடித்தளம் கொண்டவையாகியுள்ளன.

சர்வதேசமெங்கும் குமுறி வெடிக்கும் புரட்சிகர விடுதலைப் போராட்டங்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டுள்ள ஈழ விடுதலைப் போராட்டமும் பரந்து பட்ட வெகு ஜன அடித்தளம் கொண்டதாக மாறி வருகிறது.

ஈழ விடுதலைப் புரட்சியில் ஈழப்பெண்களும் தமது ஆழமான பங்களிப்பை செலுத்திடுவதன் மூலம் மட்டுமே ஈழ விடுதலைப் புரட்சி வெற்றியடைய முடியும். பெண்கள் அணிதிரட்டப்படவில்லையானால் வலுவான வெகுஜன படைப்பகுதியும் உருவாகிட முடியாது.

ஈழத்தின் தொழிலாளர் வர்க்கத்தினதும், ஏனைய மக்கள் பிரிவுகளினதும் பொதுவான பிரச்சனைகளுடன் கூடவே பெண்கள் என்கின்ற ரீதியிலும் நாம் ஒடுக்கப்படுகிறோம்.

### ஈழப்பெண்கள் மீதான ஒடுக்க முறைகள் :

ஈழத்தின் சமுக அமைப்பின் பொருளாதார அடிப்படையைக் கொண்டே ஈழப்பெண்கள் மீதான ஒடுக்கு முறைகளையும் நாம் கண்டு கொள்ள முடியும். நமது ஈழதேசத்தின் அரை நிலப்புரபுத்துவ, முதலாளித்துவ சமுதாய அமைப்பானது பெண்கள் மீது வர்க்க அடிப்படையிலான ஒடுக்கு முறைகளினை நிர்ப்பந்திக்கின்றது. இவை இரு வகைப் பட்டவையாக அமைகின்றன.

### வர்க்க ஒடுக்கு முறை

உழைக்கும் தொழிலாளி, விவசாயப் பெண்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் தனிச் சொத்துடமையினதும், மூலதனத்தினதும் நுகத்தடியின் கீழ் மூர்க்கத்தனமான சுரண்டலுக்கு உட்படுகின்றனர்.

விவசாய நடவடிக்கைகளில் மிக மலிவான கூலிகளாக பெண்கள் பாவிக்கப்படுகின்றனர். ஆண்களுக்குச் சமமான வேலைகளைச் செய்யும் சந்தர்ப்பங்களில் கூட பெண்கள் என்பதற்காக குறைவான கூலியையே பெறுகின்றனர். நாளொன்றுக்கு 8% கூலி வழங்கும் பல பிரதேசங்கள் இப்பவும் இருக்கத்தான் செய்கின்றன. தனி நபர்களின் உடமையாக இருக்கும் மின்தறி ஆலைகள், 'மீன் பதனிடும் நிலையங்கள்' போன்றவற்றில் வேலைக்கமர்த்தப்படும் பெண்களும் இதே கதிக்குள்ளாகின்றனர். இத்தொழிலாளிப் பெண்களைப் பொறுத்த மட்டில் நியமனம், ஊதியம், விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை, வேலைநேரம், ஓய்வுநேரம், பாதுகாப்பு, இவற்றல எவை தொடர்பிலும் சட்டப் பாதுகாப்பற்றவர்களாகவே உள்ளனர். ஆதாவது முதலாளித்துவவர்க்கச் சார்புடைய சட்டத்தின் குறைந்த படசக் கண்காணிப்பும் அற்றவர்களாகவே உள்ளனர். 'உடல் நலம்' தொடர்பாக ஆலை முதலாளிகளால் அறவே புறக்கணிக்கப்பட்டவர்களாக உள்ளனர். மேலும் யாழ்ப்பாண நாட்டின் சாதி அமைப்பு முறையும் விவசாயப் பெண்களை மற்றொரு புறத்தால் நெரித்துக் கொண்டிருக்கின்றது.

**வீட்டடிமைத்தனம்.**

பொதுவாகப் பெண்கள் வர்க்க நிலைகளுக்கப்பாலும் பெண்கள் என்ற ஒரேவரையறையில் குடும்பத்தளையில் சிக்கி உழல்கின்றனர். பொருளாதார அடிமைத்தனத்தில் இருந்து விடுபட உழைக்கும் பெண்கள் தமது எட்டுமணி வேலைக்கப்பால் 'வீட்டு வேலைக்காரி' யாகப்பதவியேற்கின்றனர் இந்தவேலைகளுக்காக சுமார் 5, அல்லது 6 மணி நேரம் மேலதிகமாக உழைக்கின்றனர். இவ்வாறு அடுப்படியின் நுகத்தடியின் கீழ் பெண்கள் மிகக்கொடிய உழைப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இவ்வடிப்படைக்காரணிகளின் (சொத்துடைமைச் சமூகப்) பக்கவிளைவுகளாக பெண்கள் பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகளுக்குள்ளாகின்றனர். ஏழைக்குடும்பத்திலிருந்து இளம் பெண்கள் பணக்காரர்களின் வீட்டு வேலைக்காரர்களாக அமர்த்தப்பட்டு 'தீபாவளிச் சட்டை' யோடு திருப்தியுறும் வாழ்க்கைக்குத் தள்ளப்படுவதுடன் தமது எதிர்காலத்தையே பாழடித்து விடவும் நேருகின்றது. நமது நகரங்களின் நவீன சோடனைகள் நிறைந்த தேநீர்க்கடைகள் இந்த சமூக அவலத்தின் உதாரணப் பொருள்களாக விளங்குகின்றன. இக்கடைகளின் உபசரிப்பாளர்களாக இளம் பெண்கள் (சுமார் 18—25 வயதுக்கிடைப்பட்டவர்கள்) அமர்த்தப்பட்டுள்ளனர். விலைக்கு வாங்கப்பட்ட இவ்வடிமை அவர்களின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கி விடுகின்றது. இவை தவிர கலாச்சார ரீதியாகவும் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர். யதார்த்தத்தைக் கண்டு கொள்ளாமல் மக்களை மயக்கி வைக்க முனையும் முதலாளித்துவக் கலை பெண்களை உபயோகிக்கின்றது. அவர்களை நிர்வாணமாக்குகின்றது.

**தேசிய ஒடுக்கு முறை**

ஈழ மக்கள் அனைவருக்கும் பொதுவான இத்தேசிய ஒடுக்குமுறையாலும் ஈழ மக்களின் ஒரு அங்கம் என்ற வகையில் ஈழப் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர். ஸ்ரீலங்கா படுகொலை அரசின் கொலைப்பட்டாளங்களின் காமவெறிக்கு ஈழப் பெண்கள் பலியான சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

எனவே பொதுவாக ஈழப் பெண்கள் இம் மூன்று வகையான ஒடுக்கு முறைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அனுபவிப்பவர்களாக இருக்கின்றனர் இதனால் 'விடுதலை' 'விடுதலைப் போராட்டம்' என்பவற்றை வெறும் சொற்பிரயோகங்களின் கவர்ச்சிக்காக ஈழப் பெண்களால் அங்கீகரிக்க முடியாது. எனவே ஒவ்வொரு ஈழப் பெண்ணும் எதிலிருந்து விடுதலை? என்கின்ற கேள்வியை எழுப்பி விடை கண்டாக வேண்டும் இன்றைய தேசிய விடுதலைப் போராட்டச் சூழ்நிலையில் இக்கேள்விக்குப் பதில் "ஸ்ரீலங்கா ஒடுக்கு முறையாளர்களிடமிருந்து" என்று மட்டுமே அமையுமாயின் ஈழப் பெண்கள் எதிர் நோக்கிய தேசிய ஒடுக்கு முறையில் இருந்துமட்டுமே விடுதலையளித்துள்ளது. அப்படியானால் எஞ்சிய ஒடுக்கு முறைகள் தொடர்ந்து இருக்கும். இது எதைக் காட்டுகின்றது. தேசியவிடுதலையை வென்றெடுக்க ஒடுக்கப்படும் பெண்கள் **பயன் படுத்தப்படுகிறார்கள்** என்பதையே. இதுதான் இன்று ஈழத் தொழிலாளி வர்க்கமும் எதிர் நோக்கும் பிரச்சனையாகும். பெண்கள் தமது பூரண விடுதலையை வென்றெடுப்பது 'மூலதனத்தின் அழிக்கும்' அழிக்கப்படுவதிலேயே தங்கியுள்ளது. இதிலேயே தொழிலாளி வர்க்கத்தின் பூரண விடுதலையும் தங்கியுள்ளது. "மாதர்கள் பூரண விடுதலையை வென்று பெறாதவரையிலும தொழிலாளி வர்க்கம் பூரண விடுதலையை அடைய முடியாது" என்ற தோழர் லெனின் போதனை வரிகளையே ஈழ தேச விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ளும் வர்க்க உணர்வு படைத்த ஒவ்வொரு ஈழப் பெண்ணும் தன் போராட்ட நெறியாய் கடைப்பிடிக்க வேண்டும்.

மேல்தட்டு வர்க்கத்தின் பிரதிநிதிகளான கூட்டணிக் கும்பல் தொடர்ந்தும் ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. இதன் விளைவாகவே அது ஒடுக்கு முறைச் சிறிலங்கா அரசின் காலடிகளில் சரணாகதி அடைகின்றது. இந்நிலையில் ஈழதேச விடுதலைப் போராட்டத்தை வெற்றியை நோக்கும் நடத்திச் செல்லும் வர்க்கம் ஈழத்தின் தொழிலாளர் வர்க்கமாகவே இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு நிக்காரகுவாவில் சர்வாதிகாரி அனட்டாசியோ சோமோசாவின் ஆட்சியை விரட்டியடிக்கும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொண்ட நிக்கார குவா பெண்கள், தமது பூரணவிடுதலையை வென்றெடுக்க தொழிலாளர், விவசாயிகளோடு கைகோர்த்துக் கொண்டார்களோ அது போலவே ஈழதேச விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ளும் ஈழப்பெண்களும் தமது பூரண விடுதலையை உறுதிப்படுத்த தொழிலாளர் விவசாயிகளோடு கைகோர்த்துக் கொள்வதும் இன்றியமையாததாகும்.

எனவே ஈழப் பெண்கள் பொதுவான தேசிய ஒடுக்குமுறையோடு அடிப்படையான தமக்கேயுரியதான பிற ஒடுக்கு முறைகளையும் அனுபவிப்பதனால் அவர்கள் ஓர் தனியான அமைப்பாக அணிதிரள்வது அவசியமானதாகும். அதே வேளை தொழிலாளி விவசாயப் பெண்களின் உணர்வு நிலையைக் கவனத்திற்கொண்டு அணிதிரட்டல் வேண்டும். இதன்மூலம் தொழிலாளி வர்க்கத்தை ஈழதேச விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்தியாக அணிதிரட்டுவதில் ஈழப் பெண்கள் காத்திரமான பங்களிப்பினைச் செலுத்த முடியும். இத்தகைய ஓர் வெகுஜன இயக்கத்தின் மூலமே ஈழப் பெண்கள் தமது பூரண விடுதலையை வென்றெடுக்கவும், மனிதனை மனிதன் சுரண்டாத ஒரு புதிய பூமியை; ஈழ தேசத்தை நிர்மானிக்கவும் முடியும்.

இத்தகைய புரட்சிகர அரசியல் கடமையை இன்றைய வரலாறு ஈழப்பெண்கள் மீது சுமத்தியிருக்கின்றது. இதை தவறின்றி செய்ய ஈழப் பெண்கள் புதிய கல்வியைக் கற்றாக வேண்டும். பெண்கள் தம்மீதான ஒடுக்குமுறையின் அடிப்படையான காரணிகளை அறிவியல் கண்ணோட்டத்தில் கண்டு கொள்தல் வேண்டும். இருக்கின்ற நிலைமைகளை, அதற்கான காரணிகளை கண்டு கொள்ளாமல் மாற்றியமைக்க முடியாது. இன்று அணிதிரளும் பெண்கள் இவ் விடயத்தில் செலுத்தும் அக்கறை நாளைய ஒளிமிக்கதோர் எதிர்காலத்திற்கு உறுதியளிப்பதாய் அமைகின்றது.

நிக்காரகுவாவின் குடும்பப்பெண் ''நமது குழந்தைகள் நமக்குப் போராடக் கற்றுத் தந்தார்கள்'' என்று சொல்வதில் ஈழப்பெண்கள் மத்தியிலிருந்து இன்று அரசியல் வேலைகளில் ஈடுபடும் பெண்களும் தமது கடமையை உணர முடியும் பிற்போக்கான சமூக அமைப்புக்களின் கருத்துக்களாலும், மூட நம்பிக்கைகளாலும் ஆளப்படும் ஈழப் பெண்களுக்கு முன்னணி வகிக்கும் பெண்கள் போராடக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஈழப் பெண்கள் ஒடுக்குமுறை அரசுக்கெதிரான அரசியல் போராட்ட நடவடிக்கைகளில் உறுதியுடன் இணைந்திருக்கிறார்கள். அண்மைக்கால வரலாற்றிலும் இதற்கான ஆதாரங்கள் உண்டு. பயங்கரவாதிகள் என்ற போலிக்குற்றச்சாட்டின் பேரில் மதகுருமார், விரிவுரையாளர், நிர்மலா நித்தியானந்தன் போன்றோர் கைது செய்யப்பட்டதற்கெதிராக தேசமெங்கும் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டங்களிலும், இம் மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி அவசரகாலசட்ட நிலைமைகளை மீறி யாழ்நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் ஈழப் பெண்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டு அரசுக்கெதிராக தமது வெறுப்புணர்வை வெளிப்படுத்தினர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி நடத்தப்பட்ட பாதயாத்திரையில் ஆயுதம் தாங்கிய கொலைப்பட்டாளங்களின் முன்னால் தமது உறுதியை வெளிப்படுத்தினர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளையோ, துப்பாக்கி ரவைகளையோ தாங்குவதற்குத் தயாராகவே இருந்தனர். தொழிலாள விவசாயப் பெண்களைப் பொறுத்தமட்டில் இயல்பாகவே போர்க்குணம் கொண்ட பெண்களாக உள்ளனர். இவர்கள் தமது கூலி உயர்வுக்கான போராட்டங்களிலும், யாழ்குடா நாட்டில் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களிலும் தமது போர்க்குணத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இப் பெண்களை அரசியல் மயப்படுத்தி ஸ்தாபன வடிவத்திற்குக் கொண்டுவருவதன்மூலம் ஈழதேச விடுதலைப் போராட்டத்திற்கு வீரஞ்செறிந்த பங்களிப்பினை வழங்கியே தீருவார்கள்.

சர்வதேச அரங்கில் பாலஸ்தீனத்தின் இஸ்லாமிய பெண்களும், நிக்காரகுவா, எல்சல்வடோர் பெண்களும் தமது தேச விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் ஆயுதமேந்திப் போராடுவதைப் போல ஈழதேச விடுதலைப் போராட்டத்திலும் ஈழப்பெண்கள் காத்திரமான பங்களிப்பினைச் செலுத்தித்தீருவர். இதற்கான முன்னறிவிப்புகளாகவே அண்மைக்கால அனுபவங்கள் அமைகின்றன.

**அனைத்து ஒடுக்குமுறைகளும் தகரும்வரை**

**போராடுவோம் !**

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### புதிய கருத்துகளை நாட

# புத்தக அறிமுகம்

### "கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்"

எந்த ஒரு மக்களினத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் கருத்துக்களாக இருப்பவை ஆளும் வர்க்கங்களுக்குச் சார்பான கருத்துக்களாகவே இருக்கும். ஆளும் வர்க்கங்களையும், அவை தமது பிற்போக்கான வர்க்க நலன்களைப் பாதுகாக்க மேற்கொள்ளும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் தகர்த்தெறிய முற்படும் புதிய தலைமுறைக்குப் புதிய கருத்துக்கள் அவசியமாகின்றன. அவற்றைத் தேடுவதும் இருக்கும் நிலைமைகளோடு பொருத்திப் பார்த்து அவற்றைப் புரிந்து கொள்வதும், போதிப்பதும் அவசியத் தேவையாகி விடுகின்றன. இன்று ஈழதேச விடுதலைப் போராட்டத்தில் தமது காத்திரமான பங்களிப்பினைச் செலுத்த விழையும் ஈழப் பெண்களுக்கும் இத்தேவையிருப்பதைக் கண்டறிந்து, இதன் பொருட்டே தொடர்ச்சி யாக இப்பகுதியைச் செந்தணலில் வெளியிட்டு வருகிறோம்.

**நூல்—தாய்**

**ஆசிரியர்—மக்ஸீம் கார்க்கி**

**தமிழில்—ரகுநாதன்**

ஒரு யுகப்புரட்சி இந்நாவலின் கரு; இப்புரட்சியின் சக்கரங்களை இயக்கிய பாட்டாளி வர்க்கத்தையும் உழைக்கும் வெகு ஜனங்களையும் நோக்கிப் புரட்சிகரக் கருத்துக்களைக் காவிச்செல்லும் புரட்சிகர சிந்தனையைப் பற்றிக் கொண்ட இளம் தலை முறையினர், இவர்களை அடக்கிச் சுரண்டும் வர்க்கம் தனது பலாத்காரக் கருவியான அரசு மூலம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், காட்டிக் கொடுக்கும் கயமைத்தனத்தார், கூலிக்காக அரசைக்காக்க ஆயுதமேந்தும் பட்டாளத்தார் இவை தான் இந்நாவலின் கதாபாத்திரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பிரபுத்துவத்தின் எச்ச, சொச்சங்களை உள்ளடக்கிய ஜார் மன்னனின் ஆட்சிக்குட்பட்ட முதலாளித்துவ ரஷியா இந்நாவலின் களம்.

இந்நாவலின் கருவோ, களமோ, கதாபாத்திரங்களோ எதையும் வெறும் கற்பனைப் படைப்புகளல்ல. எல்லாம் யதார்த்தத்தின் விளைபொருள்கள். சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களுக்காக அவர்களைத் தமது அவலமான வாழ்நிலையையும் இதற்குக் காரணமான தமது எதிரிகளை இனம் கண்டு எதிர்த்துப் போராடவும் புரட்சிகரக் கருத்துக்களை அவர்களிடையே விதைக்க வேண்டியுள்ளது. இந்தக் கடமையைப் புரட்சிவாதிகள் செய்கிறார்கள். அவர்கள் புரட்சிகரத் தத்துவங்களைக் கற்றுக்கொண்டு மக்களைப் புரட்சிக்குத் தட்டியெழுப்பும் நடைமுறைக்குத் தத்துவத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

மனிதனை மனிதன் சுரண்டாத ஒரு புதிய சமூக அமைப்பை நிர்மாணிக்கும் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துவிட்ட புரட்சிவாதிகள் எளிமையானவர்கள். எதிரிகள் மீது வெறுப்பும், மக்கள் மீது நேசமும் கொண்டவர்கள்.

இந்நாவலின் கதாப்பாத்திரமான தாய் கூறுகிறாள் " தங்களைப் பற்றிய எண்ணம் ஒரு சிறு துளி கூட இல்லாமல் அவர்கள் சகல மக்களுக்கும் சுபிட்சப் பாதையைக் காட்டுகிறார்கள். அவர்கள் எந்தவித ஒளிவு, மறைவுமில்லாமல் இந்தப் பாதை கரடு முரடானதுதான் என்று கூறுகிறார்கள். இந்தப் பாதையில் வரும்படி அவர்கள் யாரையும் நிர்ப்பந்திப்பதில்லை. ஆனால், ஒரு மனிதன் அவர்களோடு போய்ச்சேர்ந்து கொண்டால் அவனே அவர்களை விட்டுப் பிரிந்து செல்ல மாட்டான். ஏனெனில் அதுவே சரியான பாதை என்பதையும் அதைவிட வேறு மார்க்கமே கிடையாது என்பதையும் கண்டு கொள்வான்"

இந்த வகைப்பட்ட புரட்சிவாதிகளைத் தமது இலக்கை நோக்கி உந்தித் தள்ளும் நெம்புகோலாகத் தாய் செயற்படுகிறாள். தன் மகனதும் அவனது தோழர்களதும் நடைமுறைகள் மூலம் அவர்களது இலட்சியத்தின் மீது பற்றுக்கொண்ட தாய் தலைமறைவு இயக்கத் துண்டுப்பிரசுரங்களைத் தானே காவிச்செல்கிறாள். மக்கள் மத்தியில் விநியோக்கிறாள். தன் மகனது வாழ்க்கையோடு கலந்து தானும் புரட்சிவாதியாகிவிடும் தாயின் மனஓட்டங்களை மிகவும் அழமாகக் காட்டுகிறார் சோசலிச யதார்த்த இலக்கியத்தின் தந்தையான மக்ஸீம் கார்க்கி.

பெண்கள் புரட்சி வேலையில் உறுதியானவர்களாக இருக்க முடியாது என்ற மூடமான வாதங்களைத் தாயின் பாத்திரம் மூலம் பொடியாக்கி விடுகிறார் கார்க்கி.

புரட்சிகர இயக்கத்தின் வெற்றிக்குப் பெண்களின் பங்கு மகத்தாக அமைகின்றது. சர்வதேசமெங்கும் மனிதகுல விரோதிகளால் நிராகரிக்கப்படும் உரத்த நியாயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காகப் போராடும் படையணிகளில் பெண்களின் பங்களிப்பு முன்னெப்போதையும் விடப் பெருகி வருகிறது.

போராடும் பெண்களுக்கான செழுமையான இலக்கியமாகத் தாய் தனது ஆழமான தடத்தைப் பதித்திருக்கிறது.

புதிய கருத்துக்களை சுவீகரித்துக் கொள்ள முற்படும் பெண்களால் அவசியமாகப் படித்தறியப்படவேண்டிய புரட்சிகர இலக்கியம் தாய்.

## புரட்சிவாதிகள் சத்தியத்திற்காகப் போராடுகிறார்கள்!

## உலகின் உண்மையை நிலைநாட்டப் போராடுகிறார்கள்!

## அதுவரைக்கும் அவர்கள் ஓயமாட்டார்கள்

★

## எவரெஸ்ட்டின் உயரத்தில்...

உலகில் மிக உயரமான எவரஸ்ட் சிகரத்தின்மீது (29006 அடி உயரம்) இந்தியாவிலுள்ள உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த பச்சேந்தாரிவால் என்ற வீராங்கனை ஏறிச் சாதனை புரிந்துள்ளார். இச் சாதனையை இவருக்குமுன்பு ஏற்கனவே நான்கு பெண்கள் நிறைவேற்றியுள்ளனர். இவர் 5வது பெண் ஆவார். இவர் ஒரு கல்லூரிப் பேராசிரியை.

## இவர்கள் வேண்டவே வேண்டாம்!



தமது சொந்தக் காதல் ஆர்வத்தை அரசியலுடன் இணைத்துக் கொள்ள விரும்பும் பெண்களும், பெண் என்றதும் பின்னால் ஓடிக்கொண்டும், கண்டபெண்களுடன் எல்லாம் குலாவிக்கொண்டும் இருக்கும் ஆண்களும் எந்தப் போராட்டங்களிலும் நம்பிக்கைமிக்கவர்களாக இருக்க முடியாது.

— தோழர் லெனின்




நிஜங்களை நோக்கிய எமது வலிய போராட்டம்
நெருக்கடியான காலகட்டத்தில் பிரவேசித்துள்ளது.
எதிரிப் படைகளின் ஆணவ ஆர்ப்பரிப்புக்கள்
எம் செவிகளை அதிரவைக்கின்றன.

வட்டமேசைகளில் அமர்ந்து
இனவெறி ஈட்டிகளுக்கு சாணை பிடித்துவிட்டு
எங்கள் தேச மக்கள் இதயங்களில்
இனவாத அரசு செருகி மகிழ்கிறது.

## ஈழப்பெண்களே!

எங்கள் நேசமிகு தாயக பூமியின்
நகரம் முதல் கிராமம் வரை
ஆக்கிரமிப்பு படைகளின் அக்கினி உலாக்களில்
கருக்கப்பட்டு சிதறிக்கிடக்கும் உடல்களை ஒருமுறை
உற்று நோக்குங்கள் அவை
இரத்த நியாயங்களின் சிதைவுகளாய்
ஈவிரக்கமற்ற கொலை வெறியரின்
கோரநர்த்தனங்களுக்கான சாட்சியங்களாக
நாளைய நரபலி வேட்டைகளின் ஆரம்பங்களாக
உங்களுக்குத் தெரியவில்லையா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்துவமற்ற ஈழத்தின் பகைவர்கள்
கர்ப்பிணிப் பெண்களைக்கூட காமவெறிகொண்டு
காடைத்தனமாய் பலவந்தப் படுத்திய படுபாதகச் செயல்கள்
எதிரிகளைப் புறங்காணச் செய்யும் புரட்சிகர யுத்தத்தின்
வரலாற்று அவசியத்தை நினைவுபடுத்தவில்லையா ?

**காலம் காலமாய் அடுப்படங்கரைகளில் அடைந்து கிடந்து**
**நாட்டைக் காப்பது நாயகன் கடமை என்ற**
**நாற்றமடிக்கும் சொத்துடமைச் சமுதாயக் கருத்துக்களால்**
**நாங்கள் அடிமை இருளில் புதைந்து கிடந்தது போதும்**

ஆண்டுகள் பலவாய் அடிமை நுகத்தடிகளைச் சுமந்து
ஆக்கிரமிப்பாளர்களால் இனவாதச் சிலுவைகளில்
அறையப்படும்

ஈழத்தின் மொத்த ஜனத்தொகையில் — நாங்கள்
அரைவாசிக்கு மேலான ஜனத்தொகை
மகத்துவமிக்க ஈழத்தின் புதல்வியர்
வீட்டுச் சுவர்களுக்குள் அடங்கிக்கிடந்து
நாட்டை மீட்கும் புரட்சிகர யுத்தத்தைவிட்டு
அந்நியமாகப் போகிறோமா ?

## ஆற்றல்மிகு ஈழப் பெண்களே!

நாட்டின விடுதலைப் போராட்டம் என்பது நாயகன்
கடமைமட்டுமல்ல.
நமது கடமையுமாகும் என்பதை உணர்ந்து
மகத்துவமிக்க மக்கள் யுத்தப் பாதையில்
புதுயுகப் பெண்களாய்ப் புறப்படவேண்டிய வேளை
வந்துவிட்டது.

போய்வா மகனேஎனப் போர்க்களம் அனுப்பிவிட்டு
வீட்டிலிருக்கும்போது பகைவன் நுழைந்தால்
நாங்கள் உருக்குலைக்கப்பட்டுச் சிதைந்துபோதல் என்ன நியதி?
இதுதான் நியதியானால் இதை உடனே மாற்றி
நாம் ஒரு விதி செய்வோம்
போய்வருவோம் புறப்படு என, நாமும்
போர்க்களம் நோக்கி அலை அலையாக அணிவகுப்போம்.

## வீரமிகு ஈழப்பெண்களே !

**வீட்டுச்சுவர்களுக்குள் எம்மைப் பூட்டிவைத்து ஆணாதிக்க**
**விலங்குகளில்**
**எம்மை மாட்டிவைக்கும் முடைநாற்றமடிக்கும்**
**தனிச்சொத்துரிமை சமுதாயத்தின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றுப்போன மரபுகள் எதுவும்
வீட்டிற்குள் நுழைந்து எம்மைச் சிதைக்கும்
தேசத்துப் பகைவர்களைத் தடுத்து நிறுத்துமா ?

சப்பாத்தின் அளவுக்குக் கால்களை வெட்டும்
முட்டாள் தனங்களுடன் உறவுகளை முறிப்போம்.
மானிட விடுதலைப் பயணத்தைத் தடுக்கும்
சரணடலுக்கான மரபுகள் அனைத்தையும் தகர்த்துவீசுவோம்.

## ஆற்றல்மிகு ஈழப்பெண்களே!

சிற்றின்ப இலக்கியங்களிலும், சினிமா கொட்டகைகளிலும்
சிந்தைகளைப் பறிகொடுத்துத் தூங்கிக்கிடந்திட முடியாது.
புரட்சிகரக் கருத்துகளை உறுதியாய்ப் பற்றி
போர்க்குணம் கொண்ட பெண்கள் படைப்பகுதியை
ஈழத்துமண்ணில் உருவாக்கிக் காட்டுவோம்.
புதிய வரலாறுகளைப் படைத்துக்காட்டுவோம்.

அலங்கார ஆடைகளையும், அழகு ஆபரணங்களையும்
அணிந்துதிரிந்து போலித்தனமான புளகாங்கிதம் அடையாது
ஆயுதங்களைக் கையாளும் கலையைக் கற்போம்.
புரட்சிகரப் பெண்களாய்ப் போர்க்களம் புகுவோம்;
எமது நீதியான யுத்தத்தின் மூலம்
அநீதியான யுத்தமனைத்துக்கும் முடிவுகட்டுவோம்.

## எழுங்கள்! ஈழப்பெண்களே!! எழுங்கள்!!!

துணைவனும், துணைவியும் நடைமுறை வாழ்விலும்
நாட்டை மீட்கும் மகத்துவமான விடுதலைப் போரிலும்
சமபங்கு கொண்டு புறப்படவேண்டிய வேளை இதுதான்
புறப்படுவோம், பணி முடிப்போம்
புதியதோர் ஈழத்தை சமத்துவத் தளமாக்கி
அமைதிச் சூரியனின் ஒளிக்கதிர்களை
தேசப்பரப்பெங்கும் விளர்ந்தெழச் செய்வோம்.

## முயல்வோம்! வெல்வோம்!! உளம்சோரோம்!!!
## வெற்றி நமதே!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அரங்கில் பெண்கள்

## விறகாய் எரியும் பெண்கள் தணலாய் எழுகிறார்கள்!

கற்பழிப்பு, கடத்தல், சீதனம் போன்ற பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நாடெங்கும் அதிகரித்து வருகிறது என இந்திய சனநாயக மாதர் சங்க மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் விலைபொருட்களாக விற்கப்படுவதாகவும் இம் மகாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டது.

**இந்திய சனநாயக மாதர் சங்கம்** இந்திய மார்க்சிச கம்யூனிச கட்சியின் பெண்களுக்கான வெகுஜன அமைப்பாகும். இதன் மகாநாடு புதுக்கோட்டை என்ற இடத்தில் மே 18, 19, 20 ஆம் தேதிகளில் நடைபெற்றது. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக பெரும் கிளர்ச்சிகளையும், இயக்கங்களையும் நடத்த முன்வருமாறு இம் மகாநாடு ஒடுக்கப்படும் பெண்களுக்கு அறைகூவல் விடுத்தது.

இம் மகாநாட்டில் உழைக்கும் வர்க்கப் பெண்கள் அதிகளவில் பங்கு கொண்டனர் எனவும், மகாநாட்டில் பங்கேற்றவர்களில் 244 பேர் மணமானவர்கள் எனவும், 28 பேர் மணமாகாதவர்கள் எனவும் இ. ச. மா. ச. சென்னைப் பிரதிநிதி தோழர் புனிதா தெரிவித்தார். பெண் அடிமைத்தன கொடும் நெருப்பில் விறகாய் எரியும் பெண்கள் சர்வதேசமெங்கும் போராடப் புறப்பட்டு வருவது அதிகரிக்கிறது. சமூக விடுதலை, ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களில் சர்வதேச அரங்கில் பெண்கள் முன்னணியில் நிற்க ஆரம்பித்துள்ளனர்.

## கொலை செய்வதை நிறுத்து

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாயான பர்டினாட் மார்க்கோசின் கொடூரமான சர்வாதிகாரத்தின் காலடியில் பிலிப்பைன்ஸ் நாட்டின் எதிர்காலம் சீரழிகிறது. மார்கோசினதும் அவனது எஜமானர்களான ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக பிலிப்பைன்ஸ் மக்கள் ஆயுதமேந்தி போராடி வருகின்றனர்.


பிலிப்பைன்ஸ் மக்கள் யுத்தத்தில் பெண்களும் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். பிலிப்பைன்ஸ் பெண்கள் தெரு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

★ **எங்களுடைய தந்தையரை, கணவன்மாரை, ஆண்மக்களை, சகோதரர்களை கொலை செய்வதை நிறுத்துங்கள்.** என்னும் கோஷத்தை எழுப்பியவாறு பிலிப்பைன்ஸ் பெண்கள் பெரும் கிளர்ச்சிகளில் ஈடுபடுகின்றனர்.

★ ஒடுக்கப்படும் பெண்களின் ஐக்கியம் நீடூழி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சிகப்பு வணக்கம் (Red Salute) ★
## ஈழப் போராளி சிவகுமாரனுக்கு



ஜூன் 5, ஈழப் போராளி சிவகுமாரனது 10 வது வீர நினைவு நாள். அகிம்சையைப் போதித்த வாக்குச் சீட்டு வியாபாரிகளால் வழிமாறிச் சென்ற ஈழப் போராட்ட வரலாறு சிவகுமாரனது கால கட்டத்துடன் உத்வேகமிக்க திருப்பத்தில் தனது சுவடுகளைப் பதித்தது.

ஆயுதம் பற்றிய சிந்தனையை ஈழப் போராட்டப் பாதையில் பொறித்த முன்னணிப் போராளிகளில் சிவகுமாரன் பங்கு முக்கியத்துவமுடையதும், மதிப்பிடற்கரியதுமாகும்.

தோழர் சிவகுமாரன் உயிருடன் வாழ்ந்த போது உதவிட மறுத்து ஒதுங்கிக்கொண்ட கூட்டணியின் முழக்கவாதிகள் சிவகுமாரன் மக்களுக்காக மரித்தபோது கல்லறையில் நின்று நீலிக்கண்ணீர் வடித்தனர். பாராளுமன்ற பதவியாத்திரைக்கு சிவகுமாரன் தியாகத்தைப் படிக்கட்டாக்க பிற்போக்குத் தலைமை முயற்சி செய்தது.

தோழர் சிவகுமாரனைப் போற்றிய படியே ஆயுதங்களைக் கீழே போடுமாறு ஈழ வாலிபர்களுக்கு உபதேசம் புரிந்தது. ஆனாலும் ஈழ வரலாறு பிற்போக்குவாதிகளின் முகமூடிகளைக் கிழித்தது.

ஈழத்தின் புரட்சிவாதிகள் சிவகுமாரனது தவறுகளிலிருந்து கற்றும், சரியானவற்றைச் சுவீகரித்தும் கொண்டு ஈழப்புரட்சியை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஈழ விடுதலைக்காக உறுதியுடன் போராடும் நாம் தோழர் சிவகுமாரனது வீர நினைவுநாளில் சிகப்பு வணக்கம் செலுத்தி உறுதி ஏற்போம்.

**இரத்த சாட்சியமே! விடுதலைக்காய் நாம் நடத்தும் புனித யுத்தத்தில் உனது இலட்சியக் கனவுகளை நிஜமாக்கிக் காட்டுவோம்.**

அடிமை இருள் அகலும் வரை, எமது தாயகப் பரப்புகளில் மகிழ்ச்சியும், சமாதானமும் மலரும் வரை உயரே தூக்கிய ஆயுத முனைகளை நாங்கள் கீழே பதியோம்.

**அடிமை வாழ்வை ஒழிக்கப்போராடும் ஒவ்வொரு தோழரிலும் சிவா வாழ்கிறான். இரத்த சாட்சியமாய் ஒளிர்கின்றான்.**

## ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி (EWLF)

---

தோழர்களே! உங்கள் முற்போக்கான ஆக்கங்களை உங்களிடம் செந்தளம் எவ்வாறு வந்தடைகிறதோ அவ்வழிகளில் எமக்கனுப்பலாம். ஆக்கங்களைத் திருத்தவும், செழுமையாக்கவும் பத்திரிகைக் கமிட்டிக்கு அதிகாரம் உண்டு.

**ஓவியங்கள் — தோழர் சேய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
EPRLF
(புரட்சிகரக் கட்சி)

- செய்திப் பிரிவு
  - ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் EPIC
- வெகுஜன அமைப்பு
  - ஈழ மக்கள் விடுதலை முன்னணி EPLF
    - பெருந்தோட்ட பாட்டாளிகள் முன்னணி PPF
    - கிராமியத் தொழிலாளர், விவசாயிகள் முன்னணி RWPF
    - கடல் தொழிலாளர் முன்னணி FWF
    - ஈழ மாணவர் பொதுமன்றம் GUES
    - ஈழ வாலிப முன்னணி EYF
    - ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி EWLF
- இராணுவப் பிரிவு
  - மக்கள் விடுதலைப் படை PLA

◆ EPRLF இன் வேறு பல பிரிவுகள் இதில் குறிப்பிடப்படவில்லை.

◆ EPIC கிளைகள் இந்தியாவிலும் இலண்டனிலும் உண்டு.

த. பெ. இ. 5551 சென்னை — 600 094



---

எங்களது இயக்கத்திற்கு மக்கள் ஆதரவில்லை என்று இந்த ஆட்சியாளர்கள் திரும்பத் திரும்ப கூறுகின்றனர்; இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான கெட்ட எண்ணத்துடன் கூடிய குற்றச்சாட்டை நான் இதுவரை கேட்கவில்லை சரணடைவதையும், கோழைத் தனத்தையும் மக்கள் பக்கம்தான் எனக் காட்ட இந்த ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள்.

— தோழர் பிடல்காஸ்ட்ரோ

---

ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார வெளியீடு.